**<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>**
**<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>**
**<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>**
**<u>MCOP.No.421/2024</u>**

பெயர் :– சித்ரா (P.W.–1)
த/பெ. :–
தேதி :– 19.06.2026.
சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

<u>R1 தரப்பு குறுக்கு விசாரணை</u>:–

எனக்கு இரண்டு மகன்கள் உள்ளனர். எனது மூத்தமகன் விபத்தில் இறந்த எனது கணவரோடு சேர்ந்து பைனான்ஸ் செய்து வந்தார். எனது இளைய மகனும் பைனான்ஸ் செய்து வருகிறார். எவ்வளவு வருடம் தகப்பனாரோடு பைனான்ஸ் செய்து வருகிறார்கள் என்றால் 4 வருடமாக செய்து வருகிறார்கள். எனது குடும்பத்தில் 3 நபர்கள் வருமானம் ஈட்டி வருகிறார்கள் என்றால் எனது கணவருக்கு உதவியாக இருந்து வந்தார்கள். பைனான்ஸ்தொழில் எங்கு செய்து வருகிறார்கள் அவர்கள் அலுவலகம் வைத்து நடத்தி வரவில்லை. பைனான்ஸ் தொழில் நடத்தி வருவதற்கு ஏதேனும் உரிமம் பெற்றுள்ளார்களா என்றால் இல்லை. பைனான்ஸ் உரிமம் தொடர்பாக எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது மூத்த மகனுக்கு வயது 38. இளைய மகனுக்கு வயது 34 ஆகும். விபத்தினை நான் நேரடியாக பார்க்கவில்லை. யார் மூலம் விபத்து தொடர்பாக தகவல் கூறினார்கள் என்றால் மஞ்சள் வாய்க்கால் அருகில் குடியிருந்து வரும் விஜயலெட்சுமி மூலம் தகவல் கிடைத்தது.

விபத்து எப்படி நடந்தது என்று கூறினார்களா என்றால் சாலை ஓரம் எனது கணவர் நின்றுகொண்டிருந்தபோது ஒரு கார் வந்து அவர் மீது மோதியதாக விபரம் கூறினார்கள். அந்த கார் எந்த வகை என்ற கூறவில்லை. விபத்து எவ்வாறு நடந்தது என்றும் கூறவில்லை. எனது மூத்த மகன் மற்றும் இளைய மகன் ஆகியோர்களுக்கு திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளனர். அவர்கள் தான் தற்போது எனது கணவர் செய்த பைனான்ஸ் தொழிலை நடத்தி வருகிறார்கள். விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்தில் யார் புகார்

கொடுத்தார்கள் என்றால் நான் தான் புகார் கொடுத்தேன். எனது கணவருடன் எனது மகன்கள் கடந்த 15 வருடத்திற்கும் மேலாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறார்கள் என்றும், வழக்கிற்காக நான் பொய்யாக சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீடு அதிகம் என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.